


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2026) மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் சிவகங்கையில் 1 கோடியே 6 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்கள் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ. பெரியசாமி, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, அ. வெங்கடேசன், எம். பூமிநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். சிவகங்கை மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசி, மாங்குடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வீரபாண்டிய கட்டபொம்மன் சாலை மேம்பாலம் - மருதிருவர் சிலை-

# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்!

## மதுரையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

மதுரை, பிப்.22-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2026) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரையில் 213 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்" மற்றும் திருமங்கலம் கள்ளிக்குடி இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே கடவிற்கு மாற்றாக 38 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "வீரபாண்டிய கட்டபொம்மன் சாலை மேம்பாலம்" ஆகியவற்றை திறந்து வைத்தார்.**

**மதுரை தமுக்கம் மைதானம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை கட்டப்பட்டுள்ள "நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்" திறப்பு**

மதுரை கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணிக்கான கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் 30.10.2023 அன்று தொடங்கி வைத்தார்.

கோரிப்பாளையம் சந்திப்பானது மதுரை மாநகரின் வடபகுதியையும் தென்பகுதியையும் இணைக்கும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த மிக முக்கிய சந்திப்பாகும். இப்பாலத்தின் ஏறுதளம் தமுக்கம் பகுதியில் தொடங்கி கோரிப்பாளையம் சந்திப்பை கடந்து, வைகை ஆற்றில் ஆல்பர்ட் விக்டர் பாலத்திற்கு இணையாக புதிதாக உயர்மட்ட பாலம் கட்டப்பட்டு நெல்பேட்டை அண்ணா சிலை சந்திப்பில் இறங்கும் வகையில் 1305 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டுள்ளது. தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை மொத்தம் 39 மேல்தளப் பணிகள் (Deck Slab) அமைக்கப்பட்டுள்ளது.

தமுக்கம் முதல் கோரிப்பாளையம் சந்திப்பு வரை சேவைச் சாலை பாலத்தின் இடதுபுறத்தில் 7.50 மீட்டர் அகலத்திற்கு இரண்டு வழிதடமாகவும், வலது பகுதியில் 10.50 மீட்டர் அகலத்திற்கு மூன்று வழிதடமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. சேவைச்சாலையின் எல்லையில் மழைநீர் வடிகால் மற்றும் பேருந்து நிறுத்தத்திற்காக தனி வழிதடம் அமைக்கப்பட்டுள்ளது.

தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை பாலத்தின் அணுகு சாலை அமைத்தல், பாலத்தின் கீழ் இருபுறமும் சேவைச் சாலை அமைத்தல், வர்ணம் பூசுதல், மின்விளக்கு பொருத்துதல் மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரையிலான பிரதான மேம்பாலம் 213 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, இப்பாலத்திற்கு முதலமைச்சர் அவர்களால் 16.2.2026 அன்று "நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்" என்று பெயர் சூட்டப்பட்டது. இச்சிறப்புமிக்க பாலத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் திறந்து வைத்தார்.

மதுரை நகரின் மிகப் பரபரப்பான சந்திப்புகளில் ஒன்றான கோரிப்பாளையம் சந்திப்பில் கட்டப்பட்ட இம்மேம்பாலம், செல்லூர், தல்லாகுளம், தமுக்கம், நெல்பேட்டை, அண்ணாநகர் மற்றும் மதுரை மத்திய பகுதிகளுக்கிடையேயான போக்குவரத்தை எளிதாக்கி, பொதுமக்களின் பயண நேரத்தை குறைப்பதுடன், சாலை பாதுகாப்பையும் மேம்படுத்தும். மேலும், அவசர சேவை வாகனங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து வாகனங்கள் விரைவாகச் செல்ல வழிவகுப்பதன் மூலம் நகரின் மொத்த போக்குவரத்து திறன் மற்றும் நகர்ப்புற இணைப்பை மேம்படுத்தும்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2026) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரையில் 213 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்" திறந்து வைத்து, அப்பாலத்தில் பயணித்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ. பெரியசாமி, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, அ. வெங்கடேசன், எம். பூமிநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**திருமங்கலம் கள்ளிக்குடி இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே கடவிற்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள "வீரபாண்டிய கட்டபொம்மன் சாலை மேம்பாலம்" திறப்பு**

திருமங்கலம் கள்ளிக்குடி இரயில் நிலையங்களுக்கு இடையே உள்ள இரயில்வே கடவு எண் 377 நகராட்சி சாலையில் அமைந்துள்ளது. இந்த இரயில்வே கடவில் தினமும் சுமார் 50 முறை இரயில்வே கேட் திறந்து மூடப்படுகிறது இதனால் திருமங்கலத்திலிருந்து விமான நிலையத்துக்கு செல்பவர்களும், விமான நிலையத்திலிருந்து திருமங்கலம் வருபவர்களும் இந்த இரயில்வே கேட்டில் நின்று செல்ல வேண்டியிருப்பதால் போக்குவரத்துக்கு நெரிசல் ஏற்படுத்துவதோடு நேர விரயமும் ஏற்படுகின்றது.

இதை தவிர்க்கும் பொருட்டு, திருமங்கலம் கள்ளிக்குடி இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே கடவு எண் 377 க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு 38 கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது மேம்பாலத்தின் அனைத்து பணிகளும் முடிவுற்றுள்ளது.

இந்த புதிய சாலை மேம்பாலத்திற்கு "வீரபாண்டிய கட்டபொம்மன் சாலை மேம்பாலம்" என்று பெயர் சூட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்த மேம்பாலமானது 582 மீட்டர் நீளத்தில், நெடுஞ்சாலை பகுதியல் 11 மற்றும் இரயில்வே பகுதியில் 3, என மொத்தம் 14 மேல்தளப்பணிகள் (Deck Slab) கொண்டுள்ளது. இப்பாலத்தின் இடதுபுறம் மற்றும் வலதுபுறம் வடிகால் வசதியுடன் கூடிய பயனுறு சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பாலத்தில் அணுகு சாலை, பாலத்தின் கீழ் இருபுறமும் பயனுறு சாலை, வர்ணம் பூசுதல் மின்விளக்குகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்மேம்பாலம் திறக்கப்பட்டதன் மூலம், திருமங்கலத்திலிருந்து விமான நிலையம் மற்றும் மதுரை விமான நிலையத்திலிருந்து திருமங்கலம் செல்லும் மார்க்கத்தில் போக்குவரத்து நெரிசல் இல்லாமலும் நேர விரயமின்றியும் பொதுமக்கள் பயணிக்க முடியும். இதனால் திருமங்கலம், ஆலங்குளம், விடத்தக்குளம் மக்கள் பெரிதும் பயனடைவர்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, அ. வெங்கடேசன், எம். பூமிநாதன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர்.ஆர். செல்வராஜ், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கையில் மருதிருவர் சிலை - முதல்வர் காணொலியில் திறந்து வைத்தார்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2026) மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் சிவகங்கையில் 1 கோடியே 6 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்கள் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித் தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**மருது சகோதரர்களுக்கு நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலையை திறந்து வைத்தல்**

விருதுநகர் மாவட்டம், அழகாபுரி முக்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த பழனியப்பன் சேர்வை - பொன்னாத்தாள் தம்பதியினரின் மகன்களாக 1748ஆம் ஆண்டு பெரியமருதும், 1753ஆம் ஆண்டு சின்னமருதும் பிறந்தார்கள். மருது பாண்டியர்கள் படைத்தளப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றனர். மன்னர் விஜயரகுநாதரின் மகளான ராணி வேலுநாச்சியாரின் நண்பர்களாக மருது பாண்டியர்கள் இருந்தனர். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணமுடித்து சிவகங்கை வந்தபோது அவர்களுடன் இருந்தனர். ஆற்காடு நவாப்பிற்கு சிவகங்கை அரசினர் கப்பம் செலுத்தாத காரணத்தினால் இவர்கள் மீது ஆங்கிலேயர்கள் போர் தொடுத்தனர். இப்போரில் மன்னர் முத்துவடுகநாதர் வீரமரணம் அடைந்தார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு வீரமங்கை ராணி வேலுநாச்சியார், மருதுபாண்டியர்கள் மற்றும் ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோர்கள் உதவியுடன் ஆட்சியை கைப்பற்றினார்கள். ஆங்கிலேயர்கள் மருதுபாண்டியரை "சேர்வைக்காரர்கள் என்று சிறப்புப் பட்டம் வழங்கி அழைத்து வந்தனர். ஆங்கிலேயர்களால் 19.10.1801 அன்று சோழபுரம் காட்டில் மருது பாண்டியர்கள் சிறைப்பிடிக்கப்பட்ட பின்னர், 24.10.1801 அன்று மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

மருது சகோதரர்களை சிறப்பிக்கும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 202425ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து நடைபெற்ற விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் திருவுருவச் சிலை நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் 1 கோடியே 6 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள மருது சகோதரர்கள் திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக இன்றையதினம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, அ. வெங்கடேசன், எம். பூமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசி, மாங்குடி, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா. பொற்கொடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.